மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்

**Provincial Department of Education, Northern Province**

தரம் 10 - மூன்றாம் தவணைப் பரீட்சை 2017 நவம்பர்

**Grade 10 - Third Term Examination 2017 November**

| நுண்கலை I<br>**Art and Craft I** | 84 | T | I | ஒரு மணித்தியாலம்<br>**One Hour** |
|---|---|---|---|---|

**அறிவுறுத்தல்கள்**

*1.* **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

01) கலையே இன்பம் தரும் பொருள் என்று கூறியவர் யார்?

i.தியாக ராஜ சுவாமிகள் ii. ரவீந்திர நாத் தாஹீர்

iii.ஆனந்த குமார சுவாமி iv. கலையரசு சுவர்ண லிங்கம்

02) கட்புலக் கலைக்குள் அடங்காத தொகுதியைத் தெரிவுசெய்க.

i.அரக்குக் கைத்தொழில், நெசவுக் கைத்தெழில்

ii.பித்தளைக் கைத்தொழில், மட்பாண்டக் கைத்தொழில்

iii.ஆபர வேலை, முகமூடி கைத்தொழில்

iv.விவசாயப் பாடல், வண்ணம்

03) இலங்கையில் முகமூடிக் கைத்தொழில் நடைபெறும் மாகாணம் எது?

i.வட மாகாணம் ii. கிழக்கு மாகாணம்

iii.மத்திய மாகாணம் iv. தென் மாகாணம்

04) இலங்கையில் எப்பிரதேசத்தில் பின்னப்படும் பாய்களுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வரவேற்பு காணப்படுகிறது

i.காடகஸ்ஹெலிய ii.வாரியபொல

iii.வேவெல்தெனிய iv.தும்பறை

05) பீரலு நேந்தைக் கலை இலங்கைப் பெண்களுக்கு எந்நாட்டு பெண்மணிகள் மூலம் அறிமுகமாகின.

i.இந்தியா ii.இங்கிலாந்து iii.ஒல்லாந்து iv.பின்லாந்து

06) தொழில்நுட்ப வரைதலுக்கு பொருத்தமான பென்சில் வகையைத் தெரு செய்க

i.2H, HB, 2B ii.2B, HB, B iii.H, HB, 2H iv.4B, B, 2B

07) ▬▬ ▬ ▬▬ ▬ ▬▬ ▬ (மெல்லிய சங்கிலிக் கோடு) பொறிமுறை வரைதலின் போது மேற்படி கோட்டின் பயன்பாடு எது?


i.இடைவெட்டும் இடங்களைக் காட்டுவதற்குப் பயன்படும்

ii.பொருளின் புலனாகும் விளிம்புகளை காட்ட பயன்படும்

iii.நடு அச்சு / சமச்சீர் அச்சு என்பவற்றைக் காட்டுவதற்குப் பயன்படுகிறது

iv.முறி கோடுகளை காட்ட பயன்படுகிறது

08) .



மேற்படி படத்தில் வட்டத்தின் பகுதி ஒன்று காட்டப்பட்டுள்ளது. அப்பகுதியைத் தெரிவுசெய்க

i.பெரிய துண்டம் ii.சிறு துண்டம்
iii.ஆரைச் சிறை iv.நாண்

09) ஒரு சோடி எதிர்ப் பக்கங்கள் மட்டும் சமாந்தரம், பக்கங்கள் சமனல்ல இது

i.சதுரமாகும் ii.சரிவகமாகும்
iii.செவ்வகமாகும் iv.இணைகரமாகும்

10) டேலியா பூ ஒன்றை உரிய முறைப்படி காகிதத்தில் அமைப்பதற்குத் தேவையான அனைத்து வட்டங்களினதும் எண்ணிக்கை

i.10 ii.09 iii.05 iv.04

11) A – ஆடைகளுக்கான சாயங்களை எடுத்து வர்ணம் பூசுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளல்
B – ஆடைகளை தூய நீரில் அமிழ்த்துதல்
C – ஆடைகளில் உறுஞ்சாது நிற்கும் சாயங்களை கழுவி அகற்றுதல்

சாயமிடும்போது கடைப்பிடிக்க வேண்டிய பிரதானமான மூன்று விடயங்களின் ஒழுங்குமுறை

i.B A C ii.C A B iii.A B C iv.C B A

The National e-Learning Portal for The General Education

12) பொலியஸ்டர், லோன் துணிகளுக்கு அமிலச் சாயம் இட தேவையான சாயத்தின் அளவு

i.2.5% ii.3.5% iii.4.5% iv.5.5%

13) வர்ணக் கலப்புச் செயன்முறை புடைவைகளுக்கு சாயமிடலில் முக்கிய இடம் வகிக்கின்றது. நீலவர்ணத்தையும் சிவப்பு வர்ணத்தையும் கலக்கும் போது கிடைக்கும் வர்ணம் எது?

i.பச்சை வர்ணம் ii.ஊதா வர்ணம் iii.நீலப் பச்சை iv.சிவப்பு ஊதா

14) இலங்கையின் பல மாவட்டங்களிலும் கிராமியக் கைத்தொழிலில் ஈடுபடும் மக்கள் ஊக்குவிக்கப்படுகின்றார்கள். மன்னார் மாவட்டத்தில் பிரசித்திபெற்ற கிராமியக் கைத்தொழில் எது?

i.பித்தளைக் கைத்தொழில் ii. ரேந்தை பின்னுதல்
iii.நெசவுக் கைத்தொழில் iv.பனம்பொருள் உற்பத்தி

15) கிடைக் கோடுகள் வரையவும் மூலை மட்டத்தினால் வரையும் போதும் உதவியாக பயன்படுவது

i.வரைதற்பலகை ii.கவராயம்
iii.T வரைகோல் iv.பாகை மானி

16) பாரம்பரிய சிறு கைத்தொழிலான அரக்குக் கைத்தொழிலில் அரக்கைப்பயன்படுத்தி மிக நுணுக்கமான வரைதல்கள் மேற்கொள்ளப்படுவது

i.களி மண்ணாலானபொருட்களிலாகும் ii.மரத்தாலான பொருட்களிலாகும்
iii.தங்க ஆபரணங்களிலாகும் iv.பித்தளைப் பொருட்களிலாகும்


17) வட்டத் துண்டம் எனப்படுவது வட்டத்தின் எந்தப் பகுதி

i.நாண், வில் ஆகியவற்றினால் எல்லைப்படுத்தப்பட்ட பகுதியாகும்
ii.இரண்டு ஆரைகள், வில் ஆகியவ்றால் எல்லைப்படுத்தப்பட்ட பகுதியாகும்
iii.விட்டத்தினாலும் வில்லினாலும் எல்லைப் படுத்தப்பட்ட பகுதியாகும்
iv.வட்டம், நண் ஆரைகள் ஆகியவற்றால் எல்லைப்படுத்தப்பட்ட பகுதி

18) எமது பாரம்பரிய கிராமியக் கைத்தொழில்களைப் பாதுகாக்கவும் அவற்றை மதிக்கவும் நாம் பழக்கப்பட வேண்டும். எமது நாட்டில் கிராமியக் கலை நிர்மாணங்களை விற்பனைசெய்ய அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விற்பனை நிலையங்கள்

i.ஒசுசல ii.லக்சல, சலுசல
iii.சதொச iv.கமநல சேவை நிலையங்கள்

19) வெட்டுத் துணி நிர்மான அலங்காரத்துக்காக பல்வேறு தையல் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. பின்வரும் படம் குறிக்கும் தையல் வகை



i.சங்கிலித் தையல் ஆகும்
ii.வேரிடேரித் தையல் ஆகும்
iii.கோழிக்கால் தையல் ஆகும்
iv.கம்பளித் தையல் ஆகும்


20) .



படத்தில் காட்டப்பட்டுள்ள மட்பாண்டம் எவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ளது?

i.களிமண்ணையும் வனைசில்லையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது
ii.களிக்காப்பை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது
iii.களிகூழைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது
iv.கடதாசியின் கூழைப் பணன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது

21) .



களியைப் பயன்படுத்தி அமைத்தலின் போது பயன்படுத்தப்படும் உபகரணம் ஒன்று படத்தில் காட்டப்பட்டுள்ளது இவ் உபகரணத்தின் பயன்பாடு

i.உருவம் ஒன்றுன் கண், தலைமுடி ஆகியவற்றை அமைப்பதற்கு பயன்படுகிறது
ii.களியைப் பிசைந்து அமைக்கப் பயன்படுகிறது
iii.களியை உருட்டப் பயன்படுகிறது
iv.தேவையற்ற களியை அகற்றுவதற்குப் பயன்படுகிறது

22) பின்வருவனவற்றுள் ஒட்டும் தன்மையுள்ள மூலப் பொருளைத் தெரிவுசெய்க

i.களிக்கல் ii.படிகம் iii.கயோலின் iv.சிலிக்கா

23) உலர்ந்த தன்மையில் களியைப் பயன்படுத்தும் முறை அல்லாதது
    i.ஏதன் வெயா ii.ஸ்ரோன் வெயா
    ii.போசிலேன் iv.ஈரலிப்பு உலர் முறையில் பதப்படுதல்

24) பின்வருவனவற்றுள் கனிய நார்த் தொகுதியைத் தெரிவு செய்க
    i.உரோமம், பட்டு ii.தங்கம், வெள்ளி, கண்ணாடி
    iii.பருத்தி, லினன், சணல் iv.பொலி, ரெறலின்

25) களிமண்ணில் உள்ளடங்கியிருக்கும் சேர்வைக்கு ஏற்ப களிமண் வகைப்படுத்தப்படுகிறது. முதற் களிமண்ணைத் தெரிவுசெய்க.
    i.வெண்களிமண் ii.கறுப்புக்கிமண்
    iii.குழாய்க்களிமண் iv.கயோலனைட்களிமண்

26) டெப்லெட் (Tablet) இணைத்து அலங்காரமான இடைப்பட்டி ஒன்றை பின்னிக்கொள்ள முடியும். டெப்லெட் எனக் குறிப்பிடப்படுவது.
    i.சதுர வடிவில் வெட்டப்பட்ட தகடு ஒன்றாகும்
    ii.செவ்வக வடிவில் வெட்டப்பட்ட தகடு ஒன்றாகும்
    iii.முக்கோண வடிவில் வெட்டப்பட்ட தகடு ஒன்றாகும்
    iv.வட்ட வடிவில் வெட்டப்பட்ட தகடு ஒன்றாகும்


27) அழுக்கு நீக்கல் முறையில் மிகவும் இலகுவாக நார்களைப் பரிசீலனை செய்யலாம். பருத்தி நாரை அழுக்கு நீக்கியபின் பெறப்படும் நிறம் எது?
    i.சிவந்த ஊதா ii.கபில ஊதா iii.கபில நிறம் iv.இள ஊதா

28) களிமண் மூலக்கூற்றில் காணப்படும் கூறுகள் எவை?
    i.அலுமியம் ஒட்சைட்டு, சிலிக்கன் ii.களிக்கல், சிலிக்கா, தொலமைற்று
    iii.அலுமியம் ஒட்சைட்டு, சிலிக்கனீரொட்சைட்டு, நீர் iv.பொற்றாசியம், பொசுபரசு

29) திருவானைக்கல் என இனங்காணப்படுவது எது?
    i.படிகம் (Dolmite) ii.களிக்கல் iii.சிவப்புக்களி iv.பந்துக்களி

30) ஒட்டும் தன்மையற்ற மூலப்பொருட்களை தூளாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணத்தைத் தெரிவு செய்க.
    i.ரோளர் கிறசர் (Roller Crusher) ii.போல்மில் (Boll Mill)
    iii.ஜோய் கிறசர் (Joy Crusher) iv.பக்மில் இயந்திரம் (Pug Mill)


31) .



இந்த உருக்களில் வகை குறித்து காட்டப்படுவது
    i.வட்டத்ததுண்டம், ஆரைச்சிறை, விட்டம் ஆகும்
    ii.வட்டத்ததுண்டம், விட்டம், ஆரை ஆகியனவாகும்
    iii.கால்வட்டம், ஆரைச்சிறை, விட்டம் ஆகியனவாகும்
    iv.ஆரை, விடடம், வட்டத்துண்டம் ஆகியனவாகும்

The National e-learning Portal for The General Education

32) .




மேற்படி படத்தில் கோணங்களின் வகைகள் காட்டப்பட்டுள்ளன "A" என்ற எழுத்தில் காட்டப்பட்டுள்ள கோணம்

i.கூர்ங்கோணம் ii.பின்வளை கோணம் iii.நேர் கோணம் iv.செங்கோணம்

33) அமிலச் சாயத்தைப் பெறக்கூடிய நார் வகையைத் தெரிவு செய்க.

i.கம்பளி, பட்டு ii.செலியூலோஸ்நார்

iii.பொலியெஸ்டர் நார் iv.பருத்தி நார்

34) ஒரே அலங்காரத்தை பல தடவைகள் பெறக்கூடிய அச்சு முறையைக் குறிப்பது.

i.நூல் அச்சுப் பதிப்பு ii.சாதாரண அச்சுப் பதிப்பு

iii.துறைதகட்டு அச்சுப்பதிப்பு iv.நியம அச்சுப்பதிப்பு

35) திருமண நிகழ்வுக்கான மணவறையை அமைக்கும் போது அதன் பிரதான கூறாகக் கருதப்படுவது.


i.மணவறையின் 4 மூலைகளிலும் வைக்கப்பட்டுள்ள அதிஷ்டத்தைக் குறிக்கும் புன்கலசங்களாகும்

ii.திருமண தம்பதிளினர் மிதித்து ஏறும் படியாகும்

iii.மணவறையின் கூரை

iv.மல்லிகை பூச்சரங்கள் தொங்கவிடப்பட்டுள்ள பகுதி

36) .



மேற்படி படத்தில் காட்டப்பட்டிருப்பது எவ்வலங்கார முறையில் தயாரிக்கப்பட்ட பெண்களுக்கான கைப் பை ஆகும்

i.நிறந்தீட்டல் முறை ii.அச்சிடல் முறை

iii.பற்றிக் முறை iv.வெட்டுத்துணி அலங்கார முறை

37) புடவைகளின் அச்சிடலை மேற்கொள்வதற்காக சாயங்களின் (Fabric Paints) கருமை நிறத்தை குறைப்பதற்குச் சேர்க்கப்பட வேண்டியது.

i.சுத்தமான நீராகும் ii.வெண்ணிறச் சாயமாகும்
iii.கறுப்பு நிறச் சாயமாகும் iv.பைண்டர் பசையாகும்

38) கலவோடு என்பது?


i.சுட்ட பாண்டங்களின் தூள் ii.கல்சியம், மக்னீசியம் கலந்த காபனேற்று
iii.படிகம் iv.சாம்பல் நிறம் சார்ந்த மண்

39) வெயில், மழை, காற்று ஆகியவற்றிற்கு ஈடுகொடுக்கக்கூடியது.

i.களி ii.கடதாசிக்கூழ் iii.இரும்பு iv.சீமெந்து

40) கீழே காட்டப்பட்டுள்ள செவ்வகம் ABCDயில் பக்கம் CD ஆனது E வரை நீட்டப்பட்டுள்ளது. AEயை இணைப்பதால் உருவாகும் உரு ABCE ஆனது.

i.ஓர் ஒழுங்கற்ற நாற்பக்கல் ஆகும்
ii.ஒரு சாய்சதுரமாகும்
iii.ஒரு சரிவகமாகும்
iv.ஓர் ஐங்கோணி ஆகும்




The National e-learning Portal for The General Education

**மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்**
**Provincial Department of Education, Northern Province**

**தரம் 10 - மூன்றாம் தவணைப் பரீட்சை 2017 நவம்பர்**
**Grade 10 - Third Term Examination 2017 November**

| நுண்கலை II<br>Art and Craft II | 84 T I | இரண்டு மணித்தியாலம்<br>Two Hours |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்**

1. **முதலாம் வினாவும் வேறு தெரிந்தெடுத்த நான்கு வினாக்களும் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) பிரதேச வளங்களைப் பயன்படுத்தி கைவினைப் பொருட்களை தயாரித்து கண்காட்சி ஒன்றை வலயக்கல்வி அலுவலகம் ஏற்பாடு செய்வதென தீர்மானித்துள்ளது. இக்கண்காட்சியில் தரம் 06-13 வரையான தொழில்நுட்ப பாடங்களைக் கற்கும் மாணவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

i).கண்காட்சி நடைபெறும் மண்டபத்தின் முன்பக்க வாயிற் கதவுக்கென இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி அலங்கரிக்கத்தக்க வளைவு ஒன்றின் பருமட்டான வரிப்படத்தை வரைக.

ii).வரவேற்புப் பலகையில் இடுவதற்குப் பொருத்தமான வாசகமொன்றினை எழுதுக.

iii).விழாவுக்கு வரும் அதிதிகளுக் அணிவிப்பதற்கான இலச்சினை ஒன்றினை நிருமாணிக்குக.

iv).கண்காட்சிக்குப் பொருத்தமான அழைப்பிதழொன்றினை தயாரிக்குக.

v).வரவேற்பு நடனத்தில் பங்கேற்கும் மாணவிகளின் ஆடைகளை அலங்கரிப்பதற்கான திட்டப்படம் ஒன்றை முன்வைக்குக.

vi).விருந்தினரை வரவேற்கப் பொருத்தமான வகையிலான வட்டவடிவம் கொண்ட மலர்க்கொத்தின் வரிப்படத்தினை வரைக.

vii).10% இலாபத்துடன் பொருட்களை விற்பனை செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளமையினால் தயாரிக்கப்பட்ட மலர்க்கொத்து ஒன்றுக்கு ரூபா 500.00 செலவாகியிருப்பின் அதன் சந்தை விலை எவ்வளவாகும்?

viii).நுண்கலைப் பாடத்தைக் கற்கும மணவர்களால் கண்காட்சிக்கென சமர்ப்பிக்கத்தக்க புடைவைத்துண்டு ஆக்கங்கள் நான்கினைப் பெயரிடுக

ix).அன்றைய தினத்தில் வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ள "பிரதேச வளங்களின் முக்கியத்துவம்" என்ற நூலுக்கான அட்டைப்படம் ஒன்றை வரைக.

x).மங்கள விளக்கிற்கு முன்பாக போடத்தக்க கோலம் ஒன்று வரைக

02) புடைவை உற்பத்திச் செயல் முறையில் புடைவைக் சாயமிடுதல் மிக முகிய இடம் வகிக்கின்றது

i).வர்ணங்களைப்பெற எமது மூதாதையர் பெற்றுக்கொண்ட இயற்கைப் பொருட்ள் நான்கு தருக.

ii).நம் மூதாதையர் பின்வரும் வர்ணங்களைப் பெற்றுக்கொண்ட மூலப்பொருட்கள் எவை?

நீல வர்ணம்

கறுப்பு வர்ணம்

வெள்ளை வர்ணம்

சிவப்பு வர்ணம்

iii).சாயங்களிலிருந்து பெறப்படும் வர்ணங்கள் எவ்விடயங்களுக்கு தாக்குப்பிடிக்கக்கூடியதாக அமைதல் வேண்டும்.

03) புடைவை உற்பத்தியில் நார் வகை என்பது நீண்ட ரேகைகள் போன்ற ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு அமைப்பாகும் நெய்தலுக்கான நார் வகைகள் இயற்கைநார், செயற்கை நார் என இரண்டு வகைப்படும்

i).மரங்களிலிருந்து பெறப்படும் நார் வகைகள் நான்கைப் பெயரிடுக

ii).உரோம நார்கள் பெறப்படும் விலங்குகளைப் பெயரிடுக

iii).பூமியிலிருந்து பெறப்படும் நார் வகைகள் எவை?

04) மட்பாண்டக் கைத்தொழிலில் பாண்டங்கள் உற்பத்தியின் பொருட்டு சுரங்கங்களிலிருந்து பெறப்பட்ட களிமண்ணைப் பதப்படுத்தல் அவசியமாகும்.

i).களிமண்ணில் சேர்ந்திருக்கும் மூலப்பொருட்கள் எவை?

ii).களிமண்ணின் பௌதீக இயல்புகள் எவை?

iii).களி மண்ணைப் பதப்படுத்தும் தொழில்நுட்ப முறைகளைக் குறிப்பிடுக.

iv).களி மண் பதப்படுத்தும் முறைகள் எவை?

05) நாகரிகத்திற்கு மனிதன் காலடி வைத்த நாளிலிருந்து தான் வாழும் சூழலை அலங்காரமாக வைத்துக்கொள்வதற்கு முயற்சித்துள்ளான் என்பதற்கான சான்றுகள் பல உள்ளன.

i).பூங்கா அலங்கார ஆக்கங்கள் நிர்மாணிக்கும்பொழுது பின்பற்றப்படும் முறைகளைக் குறிப்பிடுக.

ii).சிலைகளை உருவாக்கும் போது பின்பற்றப்படும் தொழில்நுட்பங்களை எழுதுக.

iii).பூந்தோட்ட அலங்கார சிலை நிர்மாணிக்கும்போது புராதன சிற்பிகள் பயன்படுத்திய ஊடகங்கள் எவை?

The National e-learning Portal for The General Education

06) ரிபன் மூலம் வெவ்வேறு ஆடைகளுடன் வீட்டில் உள்ளக அலங்கார நிர்மாணங்களை ஆக்கலாம். சந்தையில் பல்வேறு பெயர்களில் பல்வேறு அளவுகளில் ரிபன்கள் உண்டு.

i).ரிபன் எம்பிரொய்டரி (Embroidery) மூலம் அலங்காரம் செய்வதற்கு பயன்படுத்தப்படும் ரிபன்கள் நான்கு தருக.

ii).ரிபன் எம்பிரொய்டரிற்காக பாவிக்கும் தையல் வகைகள் எவை?

iii).ரிபன் மூலம் அலங்கரிக்கக்கூடிய சுவர் அலங்காரம் ஒன்றின் மாதிரியை வரைக

07) ஆதிகால மனிதன் தன் மானத்தைக் காத்துக்கொள்ள ஆடைகளுக்குப் பதிலாக இலைகுழைகளை அணிய ஆரம்பித்துத் தோல் பட்டிகளையும் மரப்பட்டைகளையும் ஒன்றோடொன்று நார்களினால் பிணைந்து பின்னர் ஆடை நெய்தலை தொடங்கினான்.

i).நெசவுக்கோல அமைப்புக்கள் மூன்றையும் பெயரிடுக.

ii).சதா/சிறுதறி கோல அமைப்பின் பிரிவுகள் எவை?

iii).பின்னல் வடிவங்களின் போது நீட்டு நூலையும் கிடை நூலையும் இணைக்கும் தன்மையை வரைக

The National e-learning Portal for The General Education